27th April 1959]

Repairs to Kanmois in Nilakottai area

* 152 *Q.*—SRIMATHI A. S. PONNAMMAL : கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

நிலக்கோட்டையில் உள்ள கீழ்க்கண்ட கண்மாய்களை சிறுபாசன வசதி யின்கீழ் நடப்பு வருடத்தில் வெட்டியெடுத்து ஆழப்படுத்தி, விவசாயிகளுக்கு உதவிபுரிய அரசாங்கத்திற்கு ஏதேனும் உத்தேசமுண்டா ?

	கண்மாய்களின் விபரம்.	ஊர்.
1	வண்ணான்குளம்	மல்லணம்பட்டி.
2	ஆலங்குளம்	சிவஞானபுரம் கிராமம்.
3	பள்ளப்பட்டி கண்மாய்	பள்ளப்பட்டி கிராமம்.
4	அன்னசமுத்திரம் கண்மாய்	அம்மைய நாயக்கனூர் கிராமம்.
5	ஒணான்மத்து	ஜம்புதுரைக்கோட்டை கிராமம்.
6	கொக்குபட்டி கண்மாய்	கோடங்கிநாயக்கன்பட்டி கிராமம்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : No.

SRIMATHI A. S. PONNAMMAL : சபாநாயகர் அவர்களே என்னுடைய நிலக்கோட்டை தாலுகா மிகவும் வரண்ட பகுதி. அங்கு நீர்ப்பாசன வசதி இல்லாத காரணத்தால் அங்குள்ள விவசாய மக்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அதிகப்படியாக பணம் செலவு செய்தாவது அங்கு நீர்ப்பாசன வசதி செய்து கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இந்தத் தொகுதியிலே சில நீர்ப்பாசனக் கண்மாய்கள் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றன. பள்ளுப் பட்டியில் ஒன்றும் கண்மாய் இல்லை. அகரம் டாங்க் என்று ஒன்று இருக்கிறது. அது "Food Production Department" ஆல் திருத்தி யமைப்பதற்காக எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. அடுத்தது ஒருத்தட்டு கிராமத்தில் உள்ள கண்மாயைக் குறிப்பிடலாம். 1959–60-ம் வருஷத்தில் வேலை எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. இந்த தாலுகாவைப் பொறுத்த மட்டில் வேறு எந்த வேலையும் எடுத்துக்கொள்ளுவதாக இல்லை.

Educational concessions to most Backward Classes

* 153 *Q.*—SRI M. S. SELVARAJAN : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether any applications for advance grant on account of Most Backward Class concessions have been received from aided schools in the State; and

(*b*) if so, the action taken thereon?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) Yes, Sir.

(*b*) The applications were rejected as under the general head advances are already being paid.

SRI K. VINAYAKAM : Is the Hon. Minister aware of the fact that the students belonging to the most backward classes get their

scholarships in time if they are students from Government institutions and if they belong to the aided institutions their applications are delayed unnecessarily and get their scholarships only at the end?

THE HON. SRI C. SUBRAMANIAM : A separate question to my Colleague in charge of the department may be put.

SRI K. R. VISWANATHAN : May I know whether any additional allotment has been made for the grant of scholarships to the backward classes since the classification of this most backward class in this State?

THE HON. SRI C. SUBRAMANIAM : I do not think any further allotment has been made. As the hon. Member is aware the allotment for fee concessions for backward classes and scheduled classes are being increased every year.

SRI T. VELUCHAMI : இந்தச் சலுகைகள் பெறக்கூடியவர்கள், ஸ்காலர்ஷிப் பெறுவதற்கு வருடக் கடைசியாகிவிடுகிறது சாதாரணமாக. ஆகவே முன்னாலேயே அட்வான்ஸ் கொடுக்கக்கூடிய நிலையில் ஏற்பாடு செய்தால், எளிய மக்களுக்கு என்று நாம் சலுகைகள் கொடுக்கிறோம். ஆதலால் அவர்களுக்கு அது வசதியாக இருக்குமல்லவா ? அதற்கு வேண்டிய நடவடிக்கைகள் இனிமேலாவது எடுத்துக்கொள்ளப்படுமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இது அட்வான்ஸ் கிராண்டைப் பற்றிய கேள்வி. தனிக் கேள்வி போட்டால் சொல்கிறேன்.

Drinking water-supply to Mullipalayam Harijan Colony

* 154 *Q.*—SRI V. K. KOTHANDARAMAN (on behalf of Sri S. R. MUNUSWAMI) : கனம் ரெவின்யூ அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) வடாற்காடு ஜில்லா, வேலூர் தாலூகா, சேன்பாக்கம் கிராம பஞ்சாயத்து போர்டில் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம்—ஸ்தல அபிவிருத்தி திட்டத்தின் கீழ் முள்ளிப்பாளையம் ஹரிஜன பகுதிக்கு குடி தண்ணீர் குழாய் அமைப்பதைக்குறித்து 15–7–58-ல் பஞ்சாயத்து போர்டு நிறைவேற்றிய தீர்மானத்தை மறைத்துவிட்டு 29–11–58-ம் தேதி வேறொரு புதிய ரிப்போர்டை பிரஸிடெண்ட் அனுப்பி 2–12–58-ம் தேதி ஸ்தலத்தைப் பார்வையிட வந்த என்ஜினியரிடம் தனக்கு வேண்டிய முறையில் ஒரு புதிய பிளானை தயார் செய்ய ஏற்பாடு செய்து அதன்படி மெயின் பைப்பை 27–12–58-ம் தேதியே அமைத்துவிட்டது உண்மையா ?

(ஆ) 2–1–59-ம் தேதி அங்கீகாரம் செய்த பிளானிலும், தீர்மானத்திலும்கூட முள்ளிப்பாளையம் ஹரிஜன பகுதி குடி தண்ணீர் குழாய் அமைப்பு மேற்படி ஸ்தல அபிவிருத்தி திட்டத்தில் இடம் பெறாதது ஏன் ?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) No, Sir.

(*b*) A fountain has been provided for the Mullipalayam Harijan Colony. The Shenbakkam Panchayat has also proposed to provide another tap at its cost in the colony.